**செய்தி வெளியீடு எண்: 101/2023** **நாள்: 07.09.2023**

**பத்திரிக்கைச் செய்தி**

**வார்ப்புக் கூடத்தில் தானியங்கு கான்கிரீட் விநியோக அமைப்பை லார்சன் & டூப்ரோ நிறுவியது**

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்-II, வழித்தடம்-3-இல் ஒப்பந்தம் TU02 கெல்லிஸ் முதல் தரமணி வரை சுரங்கப்பாதை கட்டுமான பணிகள் பிப்ரவரி 2023 இல் தொடங்கப்பட்டன மற்றும் இதற்கான ஒப்பந்ததாரர் லார்சன் & டூப்ரோ. TU02-இல் லார்சன் & டூப்ரோ மூலம் 8 சுரங்கம் தோண்டும் இயந்திரங்கள் கெல்லிஸ் முதல் தரமணி வரை பயன்படுத்தப்படுகிறது. இந்த ஒப்பந்தத்திற்கு மொத்தம் 18000 கான்கிரீட் பிரிவு வளையங்கள் தேவை. அதில் 17100 வளையங்கள் 1.4 மீ அகலமும், 900 வளையங்கள் 1.2 மீ அகலமும் கொண்டவை (இறுக்கமான வளைவு பகுதிகளுக்கு).

லார்சன் & டூப்ரோ, சென்னை வானகரத்தில் ஒரு சுரங்கப்பாதை பிரிவு வார்ப்பு யார்டை அமைத்து மே 2022 இல் உற்பத்தியைத் தொடங்கியது. இதுவரை மொத்தம் 4400 வளையங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் ஒரு தனிப்பட்ட பார்கோடு மற்றும் ரேடியோ அதிர்வெண் குறிச்சொல்லைப் பிரிவின் உள்ளே எதிர்கால அடையாளம் மற்றும் கண்டறியும் தன்மைக்காக உட்பொதிக்கப்பட்டுள்ளது. இன்று 07.09.2023 வார்ப்பு யார்டில் தானியங்கு கான்கிரீட் விநியோக அமைப்பை லார்சன் & டூப்ரோ நிறுவியது.

இந்த அமைப்பு எந்த போக்குவரத்தையும் பயன்படுத்தாமல், கான்கிரீட் தொகுதியில் இருந்து சிமெண்டை மோல்டுகளுக்கு தானாக கொண்டு செல்வதால் உற்பத்தி திறனை அதிகரிப்பதோடு, மனிதவளத்தை குறைத்து கார்பன் வெளியேற்றத்தையும் குறைக்கிறது. இந்த சுற்றுச்சூழல் அமைப்பு பின்லாந்தின் Elematic OYJ ஆல் வழங்கப்படுகிறது. ஒப்பந்ததாரர் மேற்கொண்டுள்ள இந்த தொழில்நுட்பத்தை இந்தியாவிலேயே முதன்முறையாக கடைபிடிப்பது சென்னை மெட்ரோ என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறது.

இந்த அமைப்பினை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் திட்ட இயக்குனர் தி.அர்ச்சுனன் தொடங்கி வைத்தார். சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பொது மேலாளர் ஆன்டோ ஜோஸ் (சுரங்கப்பாதை), லார்சன் & டூப்ரோ நிறுவனத்தின் திட்ட இயக்குனர் ஜெயராம், சென்னை மெட்ரோ இரயில் மற்றும் லார்சன் & டூப்ரோ நிறுவனத்தின் உயர் அலுவலகள் மற்றும் பணியாளர்கள் இந்நிகழ்வின் போது உடனிருந்தனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**